JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 31/2015 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | PW3 | Prosecution /Defence / Court | |
| Name | Sivaraj | Caste | |
| Father's Name | Andamuthu | Calling | |
| Village | Keeleripalayam, Seenapuram | Religion | |
| Taluk | Perundurai | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of
Date: 21.09.2021

முதல் விசாரணை

நான் மேற்படி விலாசத்தில் குடியிருந்து கொண்டு பால்பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1-ன் வீட்டிற்கு முன்புறம் பால்பண்ணை வைத்து தொழில் செய்துவருகிறேன். கடந்த 20.11.2014 ஆம் தேதியில் நான் எனது கடையில் இருந்தபோது மாலை சுமார் 3 முதல் 4.00 மணியளவில் அ.சா.1-ன் வீட்டிற்கு பின்னால் இருந்த பாத்திரக்கடைக்காரர் வந்து என்னிடம் அ.சா.1- திருடன், திருடன் என்று சத்தம்போடுகிறார் என்று என்னிடம் கூறினார். நானும் பாத்திரக்கடைக்காரரும் , எனது கடைக்கு வந்த வாடிக்கையாளர் ஒருவரும் சென்றோம். முன்னால் இருந்த கேட் திறந்திருந்தது உள்ளே சென்றபோது கதவு பூட்டியிருந்தது. அதை திறக்க முற்பட்டபோது திறக்கமுடியவில்லை அதனால் கதவின் பூட்டை உடைத்து சென்றோம். அப்பொழுது வீடெல்லாம் கலைந்து கிடந்தது. அ.சா.1-ஐ கேட்டபோது மோதிரத்தையும் கம்மல் -2 ஐயும் திருடிச்சென்றுவிட்டதாக கூறினார். பின்னர் அ.சா.1 தனது மகனுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார். பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததாக தெரிந்துகொண்டேன். போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**.,

நான் சத்தம்கேட்டு சென்றபோது முன்கதவு திறந்திருந்தது. உள்ளே சென்றபோது அறையின் கதவு வெளியே பூட்டப்பட்டிருந்தது. போலீசார் விசாரித்தபோது உள்ளே சத்தம்கேட்டு படுக்கை அறையில் தாழ்போட்டிருந்தது என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. அந்த படுக்கை அறையில் இருந்த பீரோவில் இருந்த தோடுதான் காணாமல்போனதாக கூறினார் என்றால் சரிதான். அந்த படுக்கை அறையில் இருந்த பீரோவில் துணிமணிகள் எல்லாம் கலைந்து கிடந்தது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, 2சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர், பெருந்துறை.

Signature of the Witness

Name of the Interpreter
Tmt.K.S.Shabeena, B.A.B.L.
Judicial Magistrate,
Perundurai.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) on the-----day of --------------2021.

Signature of Interpreter